**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066976

1. District : Coimbatore மாவட்டம் PS: V & AC காவல்நிலையம் Year: 2019 ஆண்டு FIR No.: 11/2019/AC/CB மு.த.அ. எண் Date: 27.05.2019 நாள்
2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) & 7(A) 08.00hrs
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 07.05.2019 நாள் முதல் Date to : 26.05.2019 நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.05.2019 Time நேரம் : 07.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.05.2019 Time நேரம் : 07.00hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed (Computer)
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Coimbatore Corporation (North Zone) Dr. Balasundaram Road, Coimbatore At about 7Km South East
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Kumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Subramanian
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2019 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் Financial Specialist (g) Address : முகவரி CAS Virunthayanam, Behind Amirtha Vidhayalayam CBSE School Annaiyopar State Street 11C (Company. Street. Nallampalayam (P.O) Coimbatore
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. Ravi Kumar, Assistant Commissioner, Coimbatore Corporation (North Zone)
   2) Tr. Balakrishnan, Rtd Agri Staff Coimbatore (Private Person)
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2019/ AC/CB u/s 7(a) &7A of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் விபரம்

27.05.2019 ம் தேதி திங்கட்கிழமை காலை 07.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோயம்புத்தூர், நல்லாம்பாளையம் அஞ்சல், அன்னையப்பன் வீதி, அமிர்தவித்யாலயம் CBSE பள்ளி பின்புறம், CAS விருந்தாவனம் சுப்ரமணியன் மகன் S.குமார் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனு மற்றும் அதனுடன் ஒரு Pen drive ஆகியவைகளை என்னிடம் ஆஜர் செய்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணையும் மேற்கொண்டேன். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக் குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் வாதியின் சொத்து வரி புத்தகத்தை வழங்குவதற்கு லஞ்சம் பணம் கேட்டுவந்ததும் மற்றும் அவருக்கு உறுதுணையாக திரு.பாலகிருஷ்ணன் என்பவர் இருந்து வந்ததும் தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார் தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகார்தாரர் ஆஜர் செய்த பென்டிரைவில் இருந்த இரண்டு ஆடியோ பதிவுகளையும் புகார்தாரரின் முன்னிலையில் கேட்டு விபரம் தெரிந்து கொண்டேன். நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் பென்டிரைவில் இருந்த உரையாடல்களை கேட்டதில் இருந்தும் எதிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 27.05.2019 ம் தேதி காலை 08.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2019/ AC/CB-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகள் 7(a) & 7A -ன் படி மேற்படி எதிரிகள் 1. திரு.ரவிக்குமார், உதவி ஆணையர் மற்றும் 2) திரு.பாலகிருஷ்ணன் (தனி நபர்) ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தேன்.

புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்: S.குமார், வயது -32த/பெ. சுப்ரமணியன், CAS விருந்தாவனம், அமிர்த வித்யாலயம் CBSE பள்ளி பின்புறம் அன்னையப்பன் வீதி, நல்லாம்பாளையம் அஞ்சல், கோயம்புத்தூர்-641006. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் கோவை மாவட்டம், நல்லாம்பாளையத்தில் உள்ள அன்னையப்பன் வீதி CAS விருந்தாவனம் என்ற முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். நான் கோயம்புத்தூர் ஹோப் காலேஜில் உள்ள டைடல் பார்க்கில் அமைந்துள்ள State street HCL கம்பெனியில் Financial Specialist-ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் கோயம்புத்தூர் அன்னையப்பன் வீதி சங்கனூர் கிராமத்தில் 1580 சதுரடி பரப்பளவு உள்ள இடத்தில் தரை தளம் 400 மற்றும் முதல் தளம் 400 சதுரடியில் கட்டப்பட்டிருந்த முழுமையடையாத கட்டிடத்தை விலைக்கு வாங்கி அதில் Promoter மூலம் சுமார் 2600 சதுரடியில் கட்டிடம் கட்டி அதில் நான் முதல் தளத்திலும் எனது அண்ணன் தரை தளத்திலும் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறோம். நான் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு தனித்தனியாக சொத்துவரி நிர்ணயம் செய்வதற்காக வேண்டி கடந்த 12.03.2019-ம் தேதி கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு சென்று விண்ணப்ப படிவத்துடன் கட்டிட உரிமம், விற்பனை பத்திரம், மற்றும் இதர ஆவணங்களை இணைத்து விண்ணப்பம் செய்து அதற்கான ரசீதை பெற்றேன். ஆனால் இது சம்மந்தமாக நேரில் சென்று அங்கு விசாரிக்கும் போது எனக்கு சரியாக தகவல் கிடைக்காததால் எனது குடும்ப நண்பர் ஒருவரிடம் விபரம் கேட்டேன். அப்போது அவர் அக்ரியில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற திரு.பாலகிருஷ்ணன் என்பவரின் செல்போன் எண்ணை என்னிடம் தந்து அவரிடம் இது சம்மந்தமாக தொடர்பு கொண்டு பேசுமாறு சொன்னார். நானும் திரு.பாலகிருஷ்ணன் என்பவரது செல்போன் எண்.9442764470-க்கு 06.05.2019 தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் என்னை நேரடியாக கோவை மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் என்பவரை நேரில் சென்று பார்த்து நான் சொன்னதாக சொல்லுங்கள் என்று கூறினார். நானும் அவர் சொன்னது போல் அன்றைய தினமே காலை சுமார்11.00 மணிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல அலுவலகத்திற்கு சென்று உதவி ஆணையரை பார்க்க சென்ற போது அவர் அங்கு இல்லை. அங்கு காத்து கொண்டிருந்த போது அவரது உதவியாளர் என்னை

விசாரிக்க நான் அவரிடம் 44 வது வார்டில் இருக்கும் எனது வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்வதற்கு மார்ச் மாதத்தில் விண்ணப்பம் கொடுத்துள்ளது பற்றியும் இது பற்றி நிலவரம் தெரியவில்லை என்றும் இது சம்மந்தமாக என்னை திரு.பாலகிருஷ்ணன் என்பவர் உதவி ஆணையரை பார்க்க சொல்லி உள்ள விபரத்தை தெரிவித்தேன். அப்போது அவர் அவருடைய தொலைபேசியில் இருந்து 44-வது வார்டு பார்க்கும் பில் கலெக்டர் திரு.சுரேஷ் அவர்களை தொடர்பு கொண்டு நேரில் வரவழைத்து எனது வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய விண்ணப்பம் செய்திருப்பது குறித்தும் அது எந்த நிலையில் உள்ளது என்றும் கேட்டு இது சம்மந்தமாக உதவி ஆணையர் அவர்களை பார்க்க வந்துள்ளதாகவும், எனது வேலையை பார்த்து கொடுக்க சொன்னார். பின்னர் பில் கலெக்டர் திரு.சுரேஷ் என்னை சந்தித்து அவருடைய மொபைல் நம்பர் 9952365368-ஐ என்னிடம் கொடுத்து என்னுடைய மொபைல் நெம்பர் 9043903074-ஐ பெற்றுக் கொண்டு மதியம் என் வீட்டிற்கு நேரில் வந்து கட்டிடத்தை ஆய்வு செய்ய இருப்பதாகவும், வீட்டில் என்னை இருக்கும்படிம் கூறி அனுப்பி வைத்தார். அதன்படி அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு என் வீட்டிற்கு அவர் வந்து என் வீட்டை அளந்து பார்த்து விட்டு கட்டிட அனுமதி பெற்றதற்கு முரனாக அதிகமாக வீடு கட்டியுள்ளீர்கள், அதற்கு கட்டணம் சுமார் ரூ.20,000/- வரை ஆகும் என்றும், அடுத்த நாள் வடக்கு மண்டல அலுவலகத்திற்கு நேரில் வந்து பார்க்க சொன்னார். அதன் பேரில் 07.05.2019-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு வடக்கு மண்டல மாநகராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த பில் கலெக்டர் சுரேஷ் அவர்களை நேரில் சந்தித்தேன். அப்போது என்னுடைய வீட்டிற்கு கட்டிட விதி மீறலுக்கு ரூ.18,660/- கட்ட வேண்டும் என்று எனது விண்ணப்பத்தில் கணக்கிட்டு பணம் கட்ட சொன்னதின் பேரில் நான் ரூ.18,660/- செலுத்தி ரசீது பெற்றுகொண்டேன். ((1) ரசீது எண். 201905071738 நாள்.07.05.2019,Debris 2019-2020 ரூ.1500/-,2) ரசீது எண். 201905071745 நாள்.07.05.2019,Labour Welfare 2019-2020ரூ.11685/- 3) ரசீது எண். 201905071728 நாள்.07.05.2019,Building License 2019-2020 ரூ.5475/-). அதன் பின் அன்றைய தினம் சுமார் 11.30 மணிக்கு அங்கு அலுவலகத்தில் இருந்த உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் அவர்களை சந்தித்து திரு.பாலகிருஷ்ணன் அவர்களின் பெயரை சொல்லி எனது வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்வது தொடர்பாக நான் விண்ணப்பித்த விபரத்தை சொல்லி சொத்து வரி நிர்ணயம் செய்து கொடுக்கும் படி

கேட்டேன். அவர் உடனே பில் கலெக்டர் திரு.சுரேஷை வரவழைத்து என்னுடைய விண்ணப்பம் என்ன நிலையில் உள்ளது என்று பார்க்க சொன்னார். அதற்கு திரு.சுரேஷ் எனது வீடு கட்ட கொடுக்கப்பட்டிருந்த அனுமதிக்கு முரனாக கட்டப்பட்ட விபரத்தினையும் அதற்கான அபராத தொகையையும் நான் செலுத்தி விட்ட விபரத்தையும் கூறினார். அப்போது நானும் அதற்காக கட்டப்பட்ட பணத்துக்குண்டான ரசீதையும் அவரிடம் காண்பித்தேன். அப்போது திரு.சுரேஷ் நாளைக்கு புக் கொடுத்து விடலாம் என்று உதவி ஆணையரிடம் சொன்னார். அதற்கு உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் அவர்கள் சுரேஷை பார்த்து உடனே வரி புத்தகத்தை ரெடி செய்து கொண்டு வாருங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார். அதன் பிறகு அலுவலக உதவியாளரும் வெளியே சென்று விட்டார். அந்த சமயத்தில் திரு.ரவிக்குமார் அவர்கள் என்னிடம் நீங்கள் 2500 சதுரடிக்கு மேல் வீடு கட்டியிருக்கீங்க இதற்கு ரூ.30,000/- செலவாகும். நீங்க பாலகிருஷ்ணன் சொல்லி வந்ததால் ரூ.15,000/-ஐ மட்டும் எனக்கு தனியாக கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் பணம் இல்லை என்றும் ரெடி பண்ணிட்டு வர்ரேன்னு சொன்னதற்கு அவர் என்னிடம் ரெடி பண்ணிட்டு வந்து புத்தகம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பி விட்டார். நானும் சரி என்று வந்து விட்டேன். நான் வெளியே வந்து திரு.பாலகிருஷ்ணனிடம் செல்போனில் மேற்படி நடந்த விபரங்களை கூறினேன். அதற்கு அவரும் நான் உதவி ஆணையரிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று கூறினார். 09.05.2019-ம் தேதி மீண்டும் திரு.பாலகிருஷ்ணனை போனில் தொடர்பு கொண்டு உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் அவர்களிடம் ரூ.15,000/-த்திலிருந்து குறைத்து கேட்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் குறைக்க மாட்டார் என்றும், நான் சொன்னதால் தான் ரூ.15,000/-ஐ குறைத்து கேட்டுள்ளார் என்றும் வேண்டு மெனில் அவரை நேரில் பார்த்து பேசிக் கொள்ளுங்கள் என்றும் கூறினார். நான் 10.05.2019-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு திரு.ரவிக்குமார் அவர்களை வடக்கு மண்டல அலுவலகத்தில் நேரில் சென்று சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் Book வாங்கிட்டீங்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் Tax amount, EMI எல்லாம் கட்டியதால் பணம் பத்தல கொஞ்சம் கம்மி பண்ண முடிஞ்சா உதவியா இருக்கும் என்று உங்களை பார்த்து கேட்கலாம் என்று வந்தேன் என்று கூறினேன். அதற்கு அவர் பாலுகிட்ட சொல்லிடுங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சொல்லி விட்டேன் என்றும் அவர் தான் உங்களிடம் request

பண்ண சொன்னார் என்றும் சொன்னேன். அதற்கு அவர் எவ்வளவு குறைக்கனும்முனு எதிர்பாக்குறீங்க என்று கேட்டார். அதற்கு நான் அவரிடமே சொல்ல சொன்னேன். அவர் இதுக்கு ரூபாய் 30,000/- பக்கமாக தர வேண்டியது இருக்கும் என்று சொன்னார். நான் மீண்டும் அவரிடம் பணத்தை பற்றி அவரிடமே சொல்ல சொல்லி கேட்டபோது அவர் கோபம் அடைந்து இதெல்லாம் கேட்டிட்டு இருக்கவேண்டாம் என்று சொல்லி "என்ன பண்ணனும், நான் சும்மா செஞ்சுதரனுமா?" என்று கோபத்துடன் கேட்டார். நான் அவரிடம் மீண்டும் request பண்ணி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் அவர் பாலுவிடம் இதைபற்றி சொல்லி கொள்கிறேன் என்ற அர்த்தத்தில் பாலுவை பாருங்க என்று கூறி என்னை அனுப்பி வைத்தார். நானும் சரி என்று அங்கிருந்து கிளம்பி விட்டேன். மேலும் எனக்கும் அவருக்கும் நடந்த மேற்படி உரையாடலை எனது செல்போனில் பதிவு செய்து வைத்துள்ளேன். அன்றைய தினமே மதியம் திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடம் மேற்படி நடந்த விபரத்தை செல்போனில் கூறினேன். அவரும் உதவி ஆணையரிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். பின்பு 11.05.2019 ம் தேதி காலை திரு.பாலகிருஷ்ணன் என்னை தொலைபேசியில் அழைத்த போது நான் பிசியாக இருந்ததால் எடுக்கவில்லை. பின்னர் நான் சுமார் 12.30 மணிக்கு திரு.பாலகிருஷ்ணன் அவர்களை தொடர்பு கொண்டு பேசிய போது அவர் உதவி ஆணையர் அவரிடம் பேசியதாகவும் ஏற்கனவே அவருக்கு தனியாக கேட்ட பணம் ரூ.15,000/-தில் இருந்து ரூபாய் இரண்டாயிரமோ, மூன்றாயிரமோ குறைத்து கொண்டு பணத்தை கொடுத்து விட்டு சொத்து வரி புத்தகத்தை பெற்றுக் கொள்ளும்படி தகவல் சொன்னார். திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடம் கடந்த 13.05.2019-ம் தேதி மதியம் சுமார் 3.30 மணியளவில் அவரது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு எனது சொத்து வரி புத்தகத்தை பற்றி கேட்ட போது நாளைக்கு காலையில அவினாசி லிங்கம் பஸ் ஸ்டாப் பக்கம் வந்து பணத்தை கொடுத்துட்டு புக்கை வாங்கிக்கிறீங்களா என்று கேட்டார். அதற்கு நான் ஆபிசுக்கு போக வேண்டியது இல்லையா என்று கேட்டேன். அதற்கு அவர் உதவி ஆணையர் புக்கை அவரிடம் கொடுத்து விட்டதாகவும் புத்தகம் அவரிடம் இருப்பதாகவும் கூறினார். அதற்கு நான் ரூபாய் 10,000/-ம் தான் ரெடியாக இருக்கிறது என்று சொன்னதற்கு திரு.பாலகிருஷ்ணன் உதவி ஆணையரிடம் பணத்தை குறைக்க சொல்லி மீண்டும் கேட்க முடியாது, உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் அவர்கள் இரண்டாயிரம் ரூபாய் தான் கம்மி பண்ண சொன்னாரு,

நான் தான் அவரிடம் பேசி மேலும் ஆயிரம் ரூபாய் கம்மி பண்ண சொல்லி 12ரூபாயில பண்ணியிருக்கேன் என்று சொல்லி என்னிடம் ரூபாய் 12,000/-ம் கொண்டு வரசொன்னார். நான் எனக்கும் அவருக்கும் செல் போனில் நடந்த இந்த உரையாடலை எனது செல்போனில் பதிவு செய்து வைத்துள்ளேன். பின்னர் நான் அன்று இரவு பணிக்கு சென்று விட்டு மறுநாள் 14.05.2019-ம் தேதி வந்து வீட்டில் தூங்கி விட்டபடியால் நான் அவரை சென்று பார்க்க முடியவில்லை. அன்றைய தினம் நான் கடைக்கு போக வெளியே வந்து விட்டேன். அப்போது எனது செல்போனை பார்த்த போது திரு.பாலகிருஷ்ணன் என்னை மூன்று முறை அழைத்துள்ளார் என தெரிய வந்தது. அதை பார்த்து நான் மதியம் சுமார் 1.00 மணிக்கு அவரிடம் பேசிய போது அவர் என்னிடம் பணம் ரெடியா என்று கேட்டார். அதற்கு நான் இன்றைய தினம் வர இயலாத காரணத்தையும் பணம் ரெடியாகவில்லை என்ற காரணத்தையும் கூறினேன். அதற்கு அவர் பணம் ரெடியானால் சொல்லுங்கள் என்றும் அப்போது அருகில் எங்காவது சந்திக்கலாம் என்றும் சொல்லிவிட்டு ஆவாரம்பாளையம் ரோட்டில் வந்து தன்னை சந்திக்கும்படி கூறினார். நான் அவரை இதுவரை நேரில் சந்திக்காததாலும் அவரை நேரில் சென்று பார்த்து request செய்து பணம் கொடுக்காமல் சொத்து வரி புத்தகத்தை கேட்டு பார்க்கலாம் என்றும் நினைத்து ஆவாரம்பாளையம் ரோட்டில் ராமகிருஷ்ணா சாலை சிக்னல் அருகில் உள்ள பேக்கரி முன்பு அன்றைய தினம் மாலை சுமார் 4.30 மணிக்கு திரு.பாலகிருஷ்ணன் அவர்களை சந்தித்து பணம் தற்போது ரெடியாகவில்லை என்று கூறியதற்கு பணம் இல்லாமல் சொத்துவரி புத்தகத்தை என்னிடம் கொடுக்க கூடாது என்று உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் கூறியிருப்பதாக சொல்லி பணத்தை ரெடி செய்து விட்டு சொல்லுங்கள் நான் பணத்தை பெற்று கொண்டு சொத்துவரி புத்தகத்தை தருகிறேன் என்று கூறினார். நான் மேலும் அவரிடம் Tax புத்தகத்தின் நம்பரையாவது சொல்லுங்கள் என்று சொன்னபோது அவர் அதை சொல்ல மறுத்துவிட்டார். நான் அங்கிருந்து சென்று விட்டேன். நான் ஏற்கனவே எனது சொந்த வேலை காரணமாக எனது ஆபிசில் இருந்து ஒரு வாரம் லீவ் பெற்றிருந்தேன். எனவே நான் லீவில் வெளியூர் சென்று விட்டேன். நான் வெளியூரில் இருந்த போது நான் திரு.பாலகிருஷ்ணனை செல்போனில் தொடர்பு கொண்டு நான் வெளியூரில் இருப்பதால் பார்க்க வர முடியவில்லை என்று தெரிவித்தேன். அவரும் கோவைக்கு வந்தவுடன் அவரை வந்து பார்க்கும்படி கூறினார். நான் 26.05.2019-ம் தேதி வெளியூரில் இருந்து

கோவைக்கு வந்த பிறகு அன்றைய தினம் மாலை சுமார் 6.30 மணிக்கு திரு.பாலகிருஷ்ணனை மொபைல்போனில் தொடர்புகொண்டு பேசினேன். அப்போது அவர் நாளை பணம் கொடுத்து விட்டு புக்கை வாங்கி கொள்ளுங்கள் என்று திட்டவட்டமாக கூறினார். மேலும் அவர் செல்போனில் அவரை தொடர்பு கொண்டுவிட்டு அவரை நாளை வந்து பார்க்க சொன்னார். நான் யோசித்து பார்த்ததில் லஞ்சமாக பணம் ரூ.12,000-தை உதவி ஆணையர் திரு.ரவிக்குமாருக்கு திரு.பாலகிருஷ்ணன் மூலமாக கொடுத்து சொத்துவரி புத்தகம் பெற விருப்பம் இல்லை. எனவே என்னிடம் சொத்துவரி புத்தகத்தை தருவதற்கு லஞ்சம் கேட்கும் உதவி ஆணையர் திரு.ரவிக்குமார் மீதும், அவருக்கு லஞ்ச பணத்தை பெற்று கொடுக்க உடந்தையாக இருக்கும் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் 10.05.2019-ம் தேதி உதவி ஆணையர் திரு.ரவிக்குமாருக்கும் எனக்கும் நேரில் நடந்த உரையாடலையும், 13.05.2019-ம் தேதி நானும் திரு.பாலகிருஷ்ணனும் செல்போனில் பேசிய உரையாடலையும் நான் பதிவிறக்கம் செய்த பென்டிரைவை ஆஜர் செய்கிறேன். இடம் : கோவை தேதி : 27.05.2019 இப்படிக்கு sd/- (XXXX) 27.05.2019(S.குமார்). Madam, Received the complaint along with Pen drive on 27.05.2019 at about 07.00 hrs and after conducting Discreet enquiry a case in Coimbatore V & AC Cr.No.11/2019/AC/CB u/s 7(a) & 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered on 27.05.2019 at about 08.00 hrs and took up investigation. Sd/- (XXXX) 27.05.2019 Inspector/V &AC/Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு மற்றும் புகார் மனுவுடன் புகார்தாரர் ஆஜர் செய்த Pen drive ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

27.05.2019

(ப.பரிமளாதேவி)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவு,
கோயம்புத்தூர்.